**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| **அ.வ.எண்** | 124/2018 | **வா.சா** | 1 |
| **பெயர்** | கௌரி | **வயது** | |
| **த/பெ** | | **ஊர்** | |
| **தொழில்** | | **வட்டம்** | |
| **சாதி** | | **மாவட்டம்** | |

The Oaths Act 1969, Act No.44/1969-ன் விதிமுறைகளின் படி 11.12.2023 நாளாகிய இன்று Tr.Senthil Kumar Rajavel,L.L.M., சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என்னை சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனது தகவலின் பெயரில் தயார் செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ.40 வரை குறியீடுசெய்து வழக்கில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்க கோருகிறேன்.

**<u>3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு என்ன வயது ஆகிறது என்றால் தெரியவில்லை படிப்புஅறிவு இல்லை. திருமணம் ஆகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் தெரியவில்லை. எனக்கு ஒரு மகன், 2 பெண் மக்கள் உள்ளனர். எனது மக்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது மூத்த மகள் ரதிமாவிற்கு சுமார் 38 வயது இருக்கும். எனது 2-ம் மகள் சுகுணாவிற்கு சுமார் 36 வயது இருக்கும். என் மகன் கணேசனுக்கு சுமார் 40 வயதிற்கு மேல் இருக்கும் எனக்கு படிப்பு அறிவு இல்லை. திருமணத்தின் போது சுமார் 18 வயது இருந்து இருக்கும். எனது பெற்றோர் சொத்து எனக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். எத்தனை பாகம் கோரியுள்ளேன் என்றால் சரி சம பாகம் போரி வழக்கிட்டு உள்ளேன். என் உடன் பிறந்தவர்கள் தலைகொண்டான், கிருஷ்ணன், லட்சுமி, முருகம்மாள், சென்னகிருஷ்ணன் ஆகியவர்கள் ஆவார்கள். என் சகோதரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரபாகாரன் எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு நபர்கள் யாருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்பது ஞாபகம் இல்லை. தாவா வழக்கை 2.50 ஏக்கர் பரப்பிற்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண் ஞாபகம் இல்லை. தாவா சொத்துகள் சென்னப்பநாயக்கன்பாளையத்தில் உள்ளது. வருவாய் கிராம விவரம் தெரியாது. தாவா சொத்தை என் தாயார் செல்லியம்மாளுக்கு செய்ததாக குறிப்பிடும் தமிழ் நாடு அரசு ஆதி திராவிட நலத்துறையால் வழக்கப்பட்ட டி நமுனா வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்துகள் என் தாயாருக்கு பாதியப்பட்ட டி நமுனா சொத்து என்பது பொய்யானது என்றால் சரியல்ல. என்னால் செலுத்தி வந்ததாக குறிப்பிடும் வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

என் தாயார் இறந்த பிறகு கூட்டு சுவாதீனத்தில் இருந்ததற்கான ரசீதிகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பார்க்க வேண்டும். நான் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் கூட்டு சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றாலும் சரியல்ல. நாளது தேதியில் சொத்துக்களை தலைகொண்டான் மனைவி மகள்களும் அனுபவித்து வருகிறார். கிருஷ்ணனுக்கு திருமணம் ஆகவில்லை. கிருஷ்ணனும் சென்னனும் சொத்தின் அனுபத்தில் இருந்து வருகிறார்கள். மகசூல் ஆதாயம் கொடுத்து வந்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பாகம் கேட்டு 7, 8 வருடம் ஆகும். நான் கூறுவது போல் பாகம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 7 பிரதிவாதிகள் எனக்கு தெரியாமல் அவர்களாகவே பாக பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி கொண்டதாக கூறுகிறேன். மேற்படி பாகப்பிரிவினை ஆவணங்கள் எத்தனை வருடங்களுக்கு முன் தெரியவந்தது என்றால் ஞாபகம் இல்லை. என் சகோதரர்கள் பாகம் பிரிவினை செய்து பட்டா பெயர் மாற்றம் செய்த விவரம் எனக்கு அப்பொழுது தெரியும் என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப பட்டா பெயர் மாற்றம் குறித்து ரத்து செய்ய வருவாய் துறையில் மனு கொடுத்து உள்ளேன் எப்பொழுது என்பது தெரியாது. பட்டா ரத்து செய்ய எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் எடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் குறியிடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உருவாக்கபட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது திருமணத்தின் போது என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தார்கள். எனது திருமணத்தின் போது 10 சவரன் தங்க நகையும் ரூ.20,000/- மதிப்பு உள்ள சீர் வரிசையும் செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு எனது வீட்டு நல்ல மற்றும் கெட்ட விசேசங்களுக்கு சீர் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 25.03.1989 முன்பே எனக்கு திருமணம் ஆகிவிட்டதால் எனக்கு எந்த பாகப்பிரிவினை உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாக உரிமை இல்லை என்றாலும் பிரதிவாதி வழக்கு செலவுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**(1,2 தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai